அதைப் பொருத்தி, நெற்றியிலேயிருந்து, காது எலும்போடு தொடர்புபடுத்தினால் காது நன்றாகக் கேட்கும் என்ற முறை கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா ? இனி வருகின்ற காலங்களிலே அதைக் கொஞ்சம் குறைந்த விலையிலே கொடுப்பதற்கு அரசு ஆராய்ச்சி செய்து கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காது கேளாதவர்களுக்குக் கருவி வழங்கக் கூடிய திட்டத்தை வறுமை நிலையிலே உள்ள அனைவருக்கும் இலவசமாக வழங்கக் கூடிய திட்டத்தை அரசு அமுல் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். காது கேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் வழங்குவதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10.10]

(2) தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் விடுதி பந்தோபஸ்து ஏற்பாடு

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே இப்பொழுது அதிகமாகக் களவு போய்க் கொண்டிருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. இஸ்மாயில் அவர்களின் அறையை உடைத்துப் பொருட்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். நேற்றிரவு எங்கள் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. முத்து ராமலிங்கம் அவர்களுடைய மோதிரம், வாச் ஆகியவை களவு போயிருக்கிறது. இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நேற்று மாலை திரு. முத்துராமலிங்கத்தைப் பார்த்தேன், நான் அவருடன் இருந்தேன், அப்பொழுது அவர் இதைப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லை. (குறுக்கீடு) பிறகுதான் போயிற்றா ? என்னென்ன போயிருக்கிறது என்று எழுதிக் கொடுக்கட்டும், நான் கவனிக்கச் சொல்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இன்று காலை மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு டெலி விஷன் வழங்குவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு விலை குறைந்த டெலிவிஷனை வழங்கு வதாகச் சொன்னதாகத் தகவல் வந்திருக்கிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி பிறந்துவிட்டது தெரிகிறது.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்

நாகை ஸ்டீல் ரோலிங் மில் கதவடைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், எம். செல்லமுத்து, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் மு. அம்பிகாபதி ஆகியோர் "கடந்த இரண்டு மாத காலமாக நாகை ஸ்டீல் ரோலிங்மில் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட் டுள்ள அவதி குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள் ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ரா. உமா நாத் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவரவர்களே, நாகப்பட்டினத்திலே ஒரு முக்கியமான ஸ்டீல் ரோலிங் மில் இருப்பது தங்களுக்குத் தெரியும். பொதுவாக நாகை தாலுக்கா தொழிற்சாலைகள் இல்லாத ஒரு பிரதேசம், புதிய தொழிற் சாலைகளை அமைக்க வேண்டிய இடத்திலே நீண்டகாலமாகச்